# DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 200/2024

Prosecution Witness - P.W. 9

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர். சுந்தரமூர்த்தி |
| Father's Name | : | N. செல்லவேல் |
| Village | : | தம்பத்து கோணம் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | மருத்துவர் / Doctor |
| Age | : | 44 |
| Date | : | 17.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

17.09.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்சமயம் கன்னியாகுமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.01.2024 அன்று பணியிலருந்தபோது குலசேகர காவல் நிலைய குற்ற எண். 3/2024 வழக்கில் இறந்து போன முத்துபிள்ளை என்ற 50 வயது மதிக்கதக்க ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக விண்ணப்பத்தினை குலசேகர

காவல் நிலைய ஆய்வாளரிடமிருந்து மதியம் 2 மணிக்கு பெற்று அன்று மதியம் 2.20 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய தொடங்கி 3.20 மணி வரை பிரேத பரிசோதனை செய்தேன். பிரேதமானது பெண் காவலர் 852 திருமதி. பெமிலா என்பவர் பொறுப்பிலிருந்து அவரால் அடையாளம் காணப்பட்டு பிரேதம் குளிரூட்டும் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. பிரேதம் சாதராண போஷாக்குடனும், உடல் கட்டுடனும் காணப்பட்டது. பிரேதம் விரய்ப்பு தன்மையுடன் காணப்பட்டது. ஆஸ்பத்திரியில் ஊசி போட்ட தடயம் வலது கையின் பின்புறம் காணப்பட்டது.

<u>இறப்புக்கு முன் ஏற்பட்ட கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன :-</u>

1. வலது கண்ணின் வெளிப்புறத்தில் 2 x 1 செ.மீ. அளவுள்ள சிராய்ப்பு காயம்.

2. நெற்றியின் வலது புறத்தில் 3 x 1 செ.மீ. அளவுள்ள சிராய்ப்பு காயம்.

3. வலது புருவத்தின் 5 x 1 x 1 செ.மீ. அளவுள்ள தையல் போடப்பட்ட சிதைந்த காயம் காணப்பட்டது.

4. வலது தொடையில் வெளிப்புறத்தில் நடுவில் 4 x 1 x 1 செ.மீ. அளவுள்ள தையல் போடப்பட்ட சிதைந்த காயம் காணப்பட்டது.

தலையில் உள் ஆராயும்போது தலையின் தோலின் அடிப்பகுதியில் வலது பக்கம் முன்பகுதி, வலது பக்கவாட்டு பக்கம் மற்றும் வலது பக்க தலையின் நடுப்பகுதியில் கன்றிய காயங்கள் காணப்பட்டதன.

இடது பக்க முன் பகுதி, இடது பக்க வாட்டு பகுதி மற்றும் தலையின் பின்புறம் இடது பக்கம் கன்றிய காயங்கள் காணப்பட்டன.

மூளையின் வெளிச்சவ்வின் வெளிப்பகுதி மற்றும் உள்பகுதியில் இரத்த கசிவு

காணப்பட்டது. ஏனைய உடல் உள்ளுறுப்புகள் வெளிறி காணப்பட்டன.

உடல் உள்ளுறுப்புகளை பரிசோதனை செய்ததில் இருதயம் கொழுப்பு படிந்து காணப்பட்டது. நுரையீரல் ரத்தம் செரிந்து நீர்கோர்த்து சிவந்து காணப்பட்டது. நாவடி எலும்பு சீராக இருந்தது. இரைப்பை 75 ml அளவிலான பித்த நீருடனும், சிறுகுடல் 30 ml அளவுள்ள பித்த நிருடனும் தெளிந்த நிலையில் எந்த ஒரு நெடியும் இல்லாமல் காணப்பட்டது. கல்லீரல் பெரிய கணுக்களுடன் காணப்பட்டன. மண்ணீரல் வெளிறி காணப்பட்டது. சிறுநீரககங்கள் வெளிறி காணப்பட்டன. உடல் உள்ளுறுப்புகளை ரசாயன பரிசோதனைக்காக சேகரித்தேன். இறந்த நபர் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறந்திருக்க கூடும். அவ்வாறு பிரேத பரிசோதனை அறிக்கை கொடுத்தேன். என்னுடைய இறுதி கருத்துரையில் ரசாயன பரிசோதனை அறிக்கைக்காக நிறுத்தி வைத்திருந்தேன். ஆய்வாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை தாக்கல் செய்கிறேன். **அது அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படுவதுதான் நான் கொடுத்த பிரேத பரிசோதனை அறிக்கை. **அது அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படுவது உடல் உள்ளுறுப்புகளை ரசாயன பரிசோதனை செய்து கிடைக்கப் பெற்ற ரசாயன பரிசோதனை அறிக்கை. அதில் ஈத்தேல் ஆல்கஹாலோ அல்லது வேறு எந்த நச்சு பொருளோ இல்லை என குறிப்பிடப்பட்டிருந்தது- அந்த அறிக்கை **அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இந்த அறிக்கையின் பேரில் நான் அளித்த இறுதியறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த அறிக்கையில் இறந்தநபர் தலையில் ஏற்பட்ட காயங்களினால் இறந்திருக்ககூடும் என இறுதி

கருத்துரை அளித்துள்ளேன். **அந்த இறுதியறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 சாவியினால் ஒரு நபரின் கண்புருவம் அருகில் குத்தி இழுத்தால் மேலே சொன்ன 3 வது காயம் ஏற்பட்ட வாய்ப்புண்டு. என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 சாவியினால் ஒரு நபரின் தொடையில் குத்தி இழுத்தால் மேலே சொன்ன 4 வது காயம் ஏற்பட்ட வாய்ப்புண்டு. ஒரு நபரை ஒரு சுவரில் தலையை மாறி மாறி மோதினால் தலையிலும், மூளையிலும் இருந்ததாக நான் சொல்லியுள்ள காயங்களும், இரத்தகசிவும் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் வெளிக்காயங்களாக நான் சொல்லியுள்ள 1 மற்றும் 2 காயங்களும் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>**

ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது சா.பொ. 1 சாவியை காட்டி மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்று கேட்டாரா என்றால் கேட்டார். அவ்வாறு சாவியை காட்டி கேட்டார் என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். சா.பொ. 1 சாவியால் குத்தி சிதைந்த காயம் ஏற்பட்டிருக்குமானால் அந்த காயப்பகுதியிலிருந்த இரத்தக்கறை இருக்க வாய்ப்புண்டா என்றால் உண்டு. சா.பொ. 1 சாவியால் குத்தி சிதைந்த காயம் ஏற்பட்டிருக்குமானால் அந்த காயப்பகுதியிலிருந்த சதைத்துகள்கள் இருக்க வாய்ப்புண்டா என்றால் அது குறிப்பிட்டு சொல்ல முடியாது. ஒரு இரும்பு பொருளின் மீது இரத்தக்கறை படிந்திருந்தால் அறிவியல் ஆய்வின் மூலம் அதை கண்டுபிடிக்க

முடியும் என்றால் அந்த பொருளை தண்ணீர் ஊற்றி கழுவாமல் இருந்திருந்தால் ஆய்வில் கண்டுபிடிக்க முடியும். சாதாரணமாக சிராய்ப்பு காயம் என்பது ஒரு சுரசுரப்பான பகுதியில் காயம் பட்ட பகுதி ஊராயும்போது ஏற்படும் என்றால் சரிதான். வேகமாக ஒரு உடலின் பகுதியை மற்றொரு சுரசுரப்பான பொருளில் அடிக்கும்போது சிதைவு காயம் ஏற்படதான் வாய்ப்புண்டு என்றாலும் சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. வெளிக் காயங்கள் 1 மற்றும் 2 க்கு தொடர்புடைய உள்காயங்கள் எதுவும் என்னுடைய அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். வலது பக்க முன் தலையில் உள் பக்கம் ஏற்பட்டிருந்த காயங்களை சொல்லியுள்ளேன். அவற்றில் எந்த காயம் வெளிக்காயம் 1 க்கு தொடர்புடையது மற்றும் எந்த காயம் வெளிக்காயம் 2 க்கு தொடர்புடையது என்றால் தலையின் வலது பக்கம் உள்பக்கத்தில் ஏற்பட்டிருந்த காயங்கள் வெளிக்காயங்கள் 1 மற்றும் 2 ற்கு தொடர்புடையதுதான். என்னுடைய அறிக்கையில் அவ்வாறு எதுவும் சொல்லாமல் வழக்கிற்காக மருத்துவ நெறிமுறைகளை மீறி இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் காயங்களை குறிப்பிட்டுள்ளேன். இறந்த நபரின் கழுத்தின் முன்பகுதியில் ஆஸ்பத்திரி பேண்டேஜ் இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதன் உள்பகுதியில் காயம் எந்த நிலையில் இருந்தது என்பதை என்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்த நபரின் உடலில் இருந்த மருத்துவ சிகிச்சையின் போது ஏற்பட்ட காயங்களையும் பிரேத பரிசோதனை அறிக்கையில் சொல்ல வேண்டும் என்றால் சரிதான். இறந்த நபரின் இருதயம், கல்லீரல் ஆகியவற்றில் நான் பார்த்ததாக

சொல்லும் அசாதரணமான வேறுபாட்டுக்கும் இறந்தவரின் உடலில் நான் பார்த்ததாக சொல்லும் வெளிக்காயங்களுக்கோ, உள்காயங்களுக்கோ எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். நான் பார்த்ததாக சொல்லும் காயங்களுக்கு அவர் மருத்துவ சிகிச்சை செய்து கொண்டதாக எந்த ஒரு அடையாளமும் இருந்ததா என்றால் இல்லை. கபால எலும்புகள் எதுவும் பாதிப்படைந்திருந்ததாக என்னுடைய கூராய்வில் கண்டுபிடிக்கப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபரின் தலையை பிடித்து வேகமாக ஒரு கடினமான பகுதியில் மோதும்போது மோதப்பட்ட உடல்பகுதியில் சிதைந்த காயமாவது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரியல்ல, சிதைந்த காயம் இல்லாமல் கூட உள்காயம் மட்டும் ஏற்பட வாய்ப்புண்டு. அவ்வாறு நான் சொல்வது மருத்துவ நெறிமுறைகளை மீறி வழக்கிற்காக பொய்யாக சொல்லும் சாட்சி என்றால் சரியல்ல. பொதுவாக பிரேத பரிசோதனை அறிக்கைக்கு தரும் வேண்டுகோளுடன் படிவம் 86 பிரேத விசாரணை அறிக்கையின் நகலையும் தருவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் வேண்டுகோள் கடிதத்துடன் அதை தந்தார்களா என்றால் தந்தார்கள். எனக்கு தந்த அ.சா.ஆ. 5 வேண்டுகோள் கடிதத்தில் இறந்த நபரின் உடலில் இருந்த எந்த காயங்களை பற்றியும் சொல்லவில்லை என்றால் சரிதான். படிவம் 86 ல் இருந்திருக்கும். இறுதியறிக்கை கொடுக்கும் முன்னர் இறந்த நபருக்கு கொடுக்கப்பட்ட சிகிச்சை குறித்தான ஆவணங்கள் எதையும் நான் பார்வையிடவில்லை என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அவருக்கு கொடுக்கப்பட்ட சிகிச்சை குறித்தான ஆவணங்களை என்னிடம் காட்டி ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

Hypostasis என்பது ஒரு நபருக்கு ஏற்படும் நோயினாலும் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. அது ஒரு நபர் இறந்தபின்பு ஏற்படும் மாற்றம். தொடர் மருத்துவ கண்காணிப்பிலும், சிகிச்சையில் இருக்கும் ஒரு நபருக்கு இது வராது என்றால் சரியல்ல. இறந்த நபரின் தலையில் இருந்த உள்காயங்களுக்கு முறையான வெளிக்காயங்கள் சொல்லாமல் தற்போது அவற்றை தொடர்புபடுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த நபருக்கு இருந்த 22 கபால எலும்பில் எந்த எலும்பிற்கு கீழ் நான் தலையில் பார்த்ததாக சொல்லும் காயங்கள் இருந்தன என்று என்னுடைய அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எலும்பிலோ, எலும்பிற்கு கீழோ காயங்கள் இருந்ததாக சொல்லவில்லை. மூளைக்கு மேலே கபால எலும்பிற்கு கீழே ரத்த கசிவு இருந்ததாகதான் சொல்லியுள்ளேன். மூளையை பாதுகாப்பதற்கு Scalp மற்றும் Meninges ஆகிய இரண்டு பகுதிகள் உள்ளன என்றால் சரிதான். இந்த பகுதியில் சேதமோ, காயங்களோ இருந்ததாக என்னுடைய அறிக்கையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. Subscalp Bruising Noted Over the right fronto-tempero-Parietal and left fronto-tempero-occipital regions என்று கூறியுள்ளேன். எனது சடல கூராய்வு அறிக்கை முழுமையான பிரேத பரிசோதனை செய்து தரப்படவில்லை என்றாலும் அது குறைப்பாடாக உள்ளது என்றாலும் சரியல்ல. நான் அரசு தரப்பிற்கு ஆதரவாக மருத்துவ நெறிமுறைகளுக்கு மீறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.